State Agricultural Council

* 24 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether it is a fact that an Agricultural Council has been set up in the State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) & (இ) அரசின் ஒப்புதலை எதிர்பார்த்து, வேளாண்மை இயக்குநர் மாநில வேளாண்மை மன்றம் ஒன்றினை அமைத்துள்ளார். அதன் ஏற்புக் குறித்து, அரசு பரிசீலித்து வருகிறது.

திரு. என். டென்னிஸ்: தலைவரவர்களே, இத்தகைய வேளாண்மை மன்றங்கள் எல்லா மாவட்டங்களிலும் அமைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, ஆங்காங்கு மாவட்ட வேளாண்மை மன்றங்கள் அமைப்பதற்கு ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, இந்த வேளாண்மை மன்றங்களை நிர்வகிப்பதற்காக நியமிக்கப்படுபவர்கள் அதிகாரிகளா அல்லது அதிகாரப் பற்றற்றவர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, வேளாண்மை ஆராய்ச்சித் திட்டங்களைப் பரிசீலிக்கவும், செயல்களை ஒருமுகப்படுத்துவதற்கும் மற்றும், காலமுறைப்படி திட்டமுன்னேற்றத்தை ஆய்வு செய்வதற்கும் அரசு பல்வேறு பகுதிகளில் ஆராய்ச்சி நிலையங்களை ஏற்பாடு செய்து இருக்கிறது. அந்நிலையங்களை ஒரு முகப்படுத்துவதற்கு இந்த மன்றங்கள் பயன்படும்.

Taxis during night

* 25 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Transport be pleased to state the arrangements made by the Commissioner of Police, Madras for taxi travel for cinema goers during nights?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: "அண்ணாசிலை" "ஜெமினி" இவற்றிற்கு இடையேயுள்ள முக்கியத் திரைப்பட அரங்குகளுக்கு அருகில் வாடகைக் கார்களை நிறுத்திவைக்க அனுமதிக்கும்படி, போக்குவரத்துப் பிரிவிலுள்ள காவல் துறை அதிகாரிகள் அனைவருக்கும் கட்டளைகளிடப்பட்டிருக்கின்றன. இந்த வாடகைக் கார்கள் அங்கே நிறுத்தி வைக்கப்படுகின்றன. அவை, திரைப்பட அரங்குகளிலிருந்து வரும் பயணிகளைப் பல்வேறு இடங்களுக்கும் ஏற்றிச் செல்லுகின்றன.

வந்தவாசியில் அரசுப்போக்குவரத்துத் துறையின் கிளைப்பணிமனை

* 26 வினா—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வட ஆற்காட்டில் உள்ள வந்தவாசி பேரூராட்சியில் அரசு பஸ் டிப்போ ஏதும் செயல்பட்டு வருகிறதா ?

(இ) ஆம் எனில், அதில் எத்தனை பேர் வேலை செய்கின்றனர் ? எப்போது அது துவங்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) தமிழ்நாடு அரசுப் போக்கு வரத்துத் துறையின் கிளைப்பணிமனை ஒன்று வந்தவாசியில் செயல்பட்டு வருகிறது.

(இ) இந்தப் பணிமனையில் 18 பேர் வேலைக்கமர்த்தப்பட்டுள்ளனர். இது 20—1—1968 ஆம் நாளன்று செயல்படத் தொடங்கியது.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, வந்தவாசி அதிகமான பஸ்கள் (பேருந்துகள்) வந்து தங்கும் இடம். பஸ்ஸைத் தவிர வேறு ரயில் வசதி இல்லாத இடம். இப்போதுள்ள அரசாங்க பணிமனையில் பேருந்துகளைப் பழுதுபார்க்க போதுமான மெக்கானிக்குகள் இல்லை. இந்தப் பணிமனையில் உள்ள மெக்கானிக்குகள், மற்றும் உள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, இப்போது 26 பேருந்துகள் அந்த வழியே செல்கின்றன, 6 பேருந்துகள் தான் அங்கே தங்குகின்றன. மொத்தம் 18 பேர் அங்கே பணிபுரிகிறார்கள். ஆகவே, உடனடியாக அங்கே உள்ள மெக்கானிக்குகள் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை.

அரசு பேருந்துகளில் பெண்கள் நியமனம்

*27 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான பேருந்துகளில் டிரைவர்களாகவும், கண்டக்டர்களாகவும் பெண்களை நியமிக்க அரசு உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இல்லை.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, பெண்களுக்காக மட்டுமே ஓடிக் கொண்டிருக்கிற அரசாங்க பேருந்துகளிலாவது பெண்களை டிரைவர்களாக, கண்டக்டர்களாக நியமிக்க அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, பெண்களுக்காக ஓடிக்கொண்டிருக்கிற பேருந்துகள் நெரிசல் நேரங்களில் ஒரு தடவை அல்லது இரண்டு தடவை மட்டுமே ஓடுகின்றன. முழு நேரம் பணிபுரியக்கூடிய கண்டக்டர்களை நியமிப்பதற்கு வழியில்லை. அதே நேரத்தில், டிரைவர்களாக நியமிப்பதற்கு, டிரைவிங் லைசென்சு எல்லாம் தேவைப்படுகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. எம். இராஜா: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் கூறுகிற போது பெண்களை கண்டக்டர்களாக, டிரைவர்களாக நியமிப்பதற்கு இல்லை என்று குறிப்பிட்டார்கள். பெண்கள் யாரும் முன்வராத காரணத்தால் இல்லை யென்று அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்களா அல்லது வேறு ஏதாவது காரணம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: முன்வருகின்ற ஆண்களுக்கே வேலை கொடுக்க முடியாத இந்த நேரத்தில், பெண்கள் வேலைக்கு வருகிறார்களா இல்லையா என்ற பிரச்சினை எழவில்லை.